**வத்தேகம நகர சபை - 2022**

-----------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வத்தேகம நகர சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கணக்கு, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அதிகாரம்) 181 (I) ஆம் உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்களிலிருந்து 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வத்தேகம நகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகை தரபபினரின் பொறுப்புக்கள்

இந் நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பிரதான உள்ளக கட்டுப்பாட்டு மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன்

முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நகர சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நகர சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

-

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காயவு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்குரிய பெற வேண்டிய முத்திரைக் கட்டணங்கள் ரூபா 1,154,760 குறைத்து கணக்கு செய்யப்பட்டிருந்தது. | மீளாய்வாண்டிற்குரிய பெற வேண்டிய முத்திரைக் கட்டணங்கள் வருமானங்களை சரியாக இனங்காண முடியாமல் இருந்ததாக | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்குரிய பெற வேண்டிய நீதிமன்ற தண்டப்பண வருமானம் ரூபா 33,077 கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது | மீளாய்வாண்டிற்குரிய பெற வேண்டிய தண்டப்பண வருமானம் சரியாக இனங்காணப்பட முடியாத இருந்ததாக | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (இ) | ரூபா 400,000 பெறுமதியான மருந்து இருப்பு ஒன்று தவறுகளாக நன்கொடை பங்களிப்பு கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | தவறுதலாக நன்கொடை கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டுள்ளதாக | - மேற்படி - |
| (ஈ) | முன்னைய ஆண்டிலும் மீளாய்வாண்டிலும் மொத்தம் ரூபா 2,000,000 கடன் கொடுத்தோர் மீதி அக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டு மீளாய்வாண்டின் செயற் திட்டங்களை செயற்படுத்து வதாக குறிப்பிட்டு முறையற்ற வகையில் நலன் புரி சேவைகள் (6/81) வரவுத் தலைப்பிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது பின்னர் மீளாய்வாண்டில் செயற் திட்டத்தை நிறைவேற்றாமல் தவறுதலாக செலவினம் வரவு வைக்கப்பட்டு கடன் கொடுத்தோர் செலவு வைக்கப்பட்டிருந்தது. | விசாரணையின் பிரகாரம் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டதாக | - மேற்படி - |
| (உ) | முன்னைய ஆண்டின் போது ஏலத்தில் விற்பனை செய்யப்பட்ட மற்றும் பயன்பாட்டில் இருந்து அகற்றப்பட்டு இருந்த ரூபா 1,071,429 ஆன வாகனங்கள் மற்றும் 08 இயந்திரங்கள் தொடர்ந்தும் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. | சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | - மேற்படி - |
| (ஊ) | உடன்படிக்கைக்கு வராமல் அல்லது செயற்திட்டத்தை ஆரம்பிக்காமல் முன்னைய ஆண்டில் வாகன திருத்தங்களுக்காக ரூபா 1,000,000 மற்றும் மீளாய்வாண்டின் போது 03 செயற் திட்டங்களுக்காக ரூபா 3,277,691 தொகை கடன் கொடுத்தோராக ஆக்கப்பட்டதன காரணமாக மீளாய்வாண்டில் கடன் கொடுத்தோர் மற்றும் செலவினங்கள் ரூவா 3,277,691 கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டு இருந்தது. | அங்கீகாரம் கிடைத்த பின்னர் தேவையான நடவடிக்கைகளை எடுத்து கடன் கொடுத்தோராக ஆக்கப்பட்டதாக. | - மேற்படி - |

**1.6.2 கணக்காய்விற்காக எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 5,347,715 ஆன 06 கணக்கு மீதிகள் பொருள் மெய்மையாய்வு அறிக்கைகள், பொருளிருப்பு பதிவேடு, பௌதீக இருப்பு மற்றும் மீதிகளை உறுதிப்படுத்துவதற்கு உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்கபடாமையால் கணக்காய்வின் போது திருப்திகரமாக பரீட்சிக்க முடியவில்லை | எதிர்காலத்தில் சரியாக இனங்கண்டு ஆவணங்களை சமர்ப்பிப்பதாக | மீதிகளை உறுதிப்படுத்துவதற்கு தேவையான சான்றுகள் மற்றும் கோவைகள் தயாரிக்கப்பட வேண்டும். |

**1.7. இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் முகாமைத் தீர்மாணங்களுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், மற்றும் முகாமைத் தீர்மாணங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோஸலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 571(3) | ரூபா 154,022 பெறுமதியான 06 காலாவதியான வைப்புக்கள் விடுவிக்கப்பட்டிருக்கிவல்லை. | இத்தொகையைப் பெற்றுக்கொண்டு கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | நிதிப் பிரமாணங்களி பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 13,437,587 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 8,146,981 ஆக இருந்தது.

**2.2 வருமான நிர்வாகம்**

**2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

தலைவரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | வருமான மூலம் | 2022 மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2021 மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 18,632,500 | 19,260,675 | 20,923,925 | 10,136,765 | 18,669,500 | 18,851,056 | 12,690,626 | 11,800,015 |
| (ii) | வாடகை | 7,421,000 | 8,257,365 | 8,306,332 | 199,127 | 6,543,000 | 6,234,932 | 6,094,539 | 248,094 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 1,176,500 | 1,104,785 | 1,108,725 | 2,060 | 1,097,000 | 1,066,600 | 1,063,600 | 6,000 |
| (iv) | ஏனைய வருமானம் | 6,318,000 | 12,212,032 | 12,088,000 | 1,125,077 | 52,536,200 | 48,901,825 | 47,937,113 | 1,001,045 |
| | | 33,548,000 | 40,834,857 | 42,426,982 | 11,463,029 | 78,845,700 | 75,054,413 | 67,785,878 | 13,055,154 |

### 2.2.2 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **வீதவரியும் வரியும்** | | |
| **(i)** | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு நிலுவை வீதவரி மீதி ரூபா 3,189,941 ஆக இருந்ததுடன் அலகொன்றில் ரூபா 5,000 இற்கு மேற்பட்ட 196 வீதவரி அலகுகளில் மொத்தம் 1,786,202 ஆக இருந்தது. | நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு நிலுவைத் தொகையை அறவிடப்படும். | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் வருமானம் அறவிடப்பட வேண்டும். |
| **(ii)** | 1946 இன் 30 ஆம் இலக்க வீத வரி மற்றும் மதிப்பீட்டு கட்டளை சட்டத்தின் 20 ஆம் பிரிவின் பிரகாரம் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு தடவை வீதவரி மதிப்பீடு மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் 2015 ஜனவரி 02 ஆம் திகதிய மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் 2022 ஆம் ஆண்டுக்காக வீத வரி அறவிடப்பட்டிருந்தது. | எதிர்வரும் காலங்களில் திருத்து வதற்கு நடவடிக்கையை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | புதிய மதிப்பீட்டு அறிக்கையை பெற்றுக் கொண்டு அளவிடப்பட வேண்டும் |
| **(ஆ)** | **கடை வாடகை** | | |
| (i) | குடுகல வீதியில் அமைந்துள்ள குறைந்த 10 குறைந்த வாடகை வீடுகளிலிருந்து 2019 ஆம் ஆண்டில் மதிப்பீட்டை செயற்படுத்தாமல் 1992 ஆம் ஆண்டின் மதிப்பீட்டின் அடிப்படையில் வாடகை அறவிடப்பட்டதன் காரணமாக 2019 திசம்பர் முதல் 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரை 36 மாதங்களுக்காக | புதிய மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் கடை வாடகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் குறித்த கடை வாடகை அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சபைக்கு ரூபா 811,040 ஆன வருமானம் ஒன்று இழக்கப்பட்டு இருந்தது. | | |
| (ii) | 2022 யூன் 22 ஆந் திகதிய மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் 14 கடைகளின் குத்தகை வாடகை திருத்தம் செய்யப்பட்டிருந்த போதும் குத்தகை உடன்படிக்கையின் 04 (iii) பந்தியின் நிபந்தனை பிரகாரம் புதிய உடன்படிக்கைகளுக்கு வர நடவடிக்கை எடுிக்கப்படவில்லை. | புதிய மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் கடை வாடகை உடன்படிக்கை செய்வதற்கு அறிவிக்கப்பட்டிருந்த போதும் இணக்கப்பாட்டை தெரிவிக்கவில்லை என்பதாக | புதிய மதிப்பீட்டின் பிரகாரம் உடன்படிக்கை செய்யப்பட்டு வாடகை தொகை அளவிடப்பட வேண்டும். |
| **(இ)** | **ஏனைய வருமானம்** | | |
| (i) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு நிலுவை நீர் கட்டண மீதி ரூபா 6,946,823 ஆக இருந்ததுடன் அதில் ஒரு அலகு நீர் கட்டண நிலுவை ரூபா 10,000 இற்கு மேற்பட்ட 168 நீர் பாவனையாளர் அலகுகளின் மொத்தம் ரூபா 898,623 ஆக இருந்தது. | துண்டிக்கும் கட்டளை செயல்படுத்தப்பட்டு நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிலுவை நீர்க் கட்டணங்கள் அறவிடப்பட வேண்டும். |
| (ii) | 757 நீர் பாவனையாளர்களுக்காக நிர்மாணி பொருத்தப்படா திருந்ததுடன் இந்த வாடிக்கையாளர்களின் வீட்டுக்கு ரூபா 400 மற்றும் வியாபாரங்களுக்காக ரூபா 550 நிலையான கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருந்தது. | எதிர்காலத்தில் நீர்மாணி பொருத்தப்பட்டு கட்டணங்கள் அறவிடப்படும் | நிர்மாணிகளைப் பொருத்தி உரிய கட்டணங்களை அறவிடப்பட வேண்டும் |
| **2.2.3** | **நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்** | | |
| | மாகாண சபையின் பிரதான செயளலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 325,077 மற்றும் முத்திரைக் கட்டணங்கள் ரூபா 800,000 ஆக இருந்தது. | நிலுவை முத்திரைக் கட்டணங்களையும் நீதிமன்ற தண்டப்பணத்தையும் அறவிடுவதாக | நிலுவை முத்திரைக் கட்டணங்களையும் நீதிமன்ற தண்டப் பணத்தையும் பெற்றுக் கொள்ள வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றுதல்

நகர சபைகள் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முன்பள்ளி பாடசாலை ஒன்று வாரச்சந்தை ஒன்றும் சிறுவர் பூங்கா ஒன்று போன்ற பொதுமக்கள் பயன்பாட்டு சேவைகள் செயற்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு இருக்கவில்லை | நிதி ஏற்பாட்டை கருத்திக் கொண்டதன் பின்னர் இச் செயற் திட்டங்களை நிறைவேற்றுவதாக | சட்டத்தின் செயற்பாடுகள் நிறைவேற்றப்பட வேண்டும் |
| (ஆ) | வருடாந்த பாதிட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 4,888,750 ஆன 27 அபிவிருத்தி முன்மொழிவுகளை நிறைவேற்றப்பட்டு இருக்கவில்லை. | சபை முன்மொழிவு அங்கீகரிக்கப்படமையால் இச்ச திட்டங்களை நிறைவேற்ற முடியாத உள்ளதாக | பாதிட்டினை அங்கீகரித்து செயற் திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டும் |
| (இ) | சபைக்கு உரிய 03 நீர் செயற்திட்டங்களில் 2019 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட நீர் மாதிரி பரிசோதனை அறிக்கையின் பிரகாரம் ஈ கோலி )E Coli) பாக்டீரியா கலவை 30 - 760 இடையேயான வீச்சில் காணப்பட்டதுடன் நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் (255 அதிகாரம்) 104 பிரிவின் பிரகாரம் பொது சுகாதார அதிகாரியாக சபை நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் பொருத்தமற்ற அசுத்த நீர் பொது மக்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் பரீட்சிக்கப்பட்டு அறிக்கையிடுவதாக | நீர் மாதிரிகள் பரீட்சிக்கப்பட்டு சுத்தமான குடிநீர் வழங்கப்பட வேண்டும் |
| (ஈ) | நகர சபை கட்டளைச் சட்டத்தின் (255 அதிகாரம்) 118 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் பிரதேசத்தின் வீடுகளில் மல கழிவுகளை வெளியேற்றுவதற்காக கலி வண்டி சேவை ஒன்றை பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏனைய சபைகளில் இருந்து கலி வண்டி சேவைகளை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | சட்டத்தின் செயற்பாடுகள் நிறைவேற்றப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (உ) | நீர்ப்பீடன நிகழ்ச்சித் திட்டங்கள், கழிவுப்பொருள் முகாமைத்துவம், டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் சுகாதார மற்றும் சுற்றாடல் சேவை மற்றும் உணவு மாதிரிகளை பரிசோதனை போன்ற செயற் பாடுகளுக்காக மீளாய்வாண்டில் 05 விடயங்களுக்கு ரூபா 500,000 நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதும் அச்செயற்பாடு நிறைவேற்றப்பட்டு இருக்கவில்லை. | நிதி ஏற்பாடு பெற்றுக் கொள்ளப்பட்டதாக | நிதி ஏற்பாட்டை பெற்றுக்கொண்டு குறித்த செயற்பாடுகளை நிறைவேற்றுதல் வேண்டும் |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய கணக்கு மீதிகளின் மொத்தம் ரூபா 12,842,274 ஆக இருந்ததுடன் அதில் 3 இற்கும் 5 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலத்திற்குரிய மீதிகளின் மொத்தம் ரூபா 583,167 மற்றும் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இருந்து வரும் மொத்தம் ரூபா 1,064,887 ஆக இருந்தது. | குறித்த தரப்பினர் அறிவுறுத்தப்பட்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | பெறவேண்டிய மீதிகள் அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய 04 கணக்குகளின் மீதிகளின் கூட்டு:த்தொகை ரூபா 16,493,232 ஆக இருந்ததுடன் அதில் 1 இற்கும் 3 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலப்பகுரிய மீதிகளின் மொத்தம் ரூபா 1,967,675 ஆகவும் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக காணப்படும் மீதிகளின் மொத்தம் ரூபா 287,663 ஆக இருந்தது | வருமானத்திற்கு எடுப்பதற்கும் கொடுப்பனவு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | செலுத்த வேண்டிய மீதிகள் தீர்வு செய்யப்பட வேண்டும். |
| (இ) | மாத்தளை வீதி துண்ஓயகும்புற / புஸ்ஸேபிட்டிய அல்லது மியன்பாஹே வத்தை கழவத் தொகதி அருகில் 08 வீடுகள் அத்துமீறி நிர்மாணிக்கப்பட்டு குடியிருப்புக்காக பயன்படுத்தப்பட்டிருந்தன. | எதிர்காலத்தில் வீடுகளை அமைத்து வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | அத்துமீறிய குடியிருப்பாளர்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

### 3.3 விளைவற்ற குறைப் பயன்பாட்டிலான ஆதனங்கள் , பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 8,653,125 ஆன வாகனங்கள் மற்றும் 07 இயந்திரங்கள் 3 ஆண்டு முதல் 10 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் விளைவற்றும் குறைப் பயன்பாட்டுடனும் காணப்பட்டன. | ஏலவிற்பனை செய்வதற்கு அல்லது திருத்தம் செய்து பயன்பாட்டிற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஏலத்தில் விற்பனை செய்யவோ பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) ரூபா 2,982,977 செலவிடப்பட்டு 2020 யூலை 06 ஆம் திகதி வேலை பூர்த்தி செய்யப்பட்ட சிறுவர் நூலகம் மீளாய்வாண்டின் இறுதி திகதி வரையிலும் விளைவற்று காணப்பட்டது. | திருத்தம் செய்யப்பட்டு இந்த இடத்தில் சிறுவர் நூலகமொன்றை தாபிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | கட்டிடத்தை பயனுள்ள செயற்பாட்டிற்காக ஈடுபடுத்த வேண்டும். |

### 3.4 செயற்திட்டங்கள், பணிகள் மற்றும் மூலதன வேலைத்திட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 850,000 மதிப்பீடு செய்யப்பட்டு 2022 ஜுலை 27 ஆம் திகதி வேலை ஆரம்பிக்கப்பட்டு இருந்த கொரஹிட்டியாடிதனிய வீதியின் ஒரு பகுதி நிர்மாணிக்கப்பட்டு அதற்காக ரூபா 200,000 செலவிடப்பட்டு நிர்மாண நடவடிக்கைகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டு இருந்தது | வேலை பூர்த்தி செய்யப்பட்ட திகதி நீடிக்கப்பட்டுள்ளதுடன் தாமத கட்டணங்கள் அறவிடப்படுவதாக | உடன்படிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

### 3.5 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) ஊழியர் வெற்றிடங்களும் மிகையும்** | | |
| அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளவாறான பதவியணியுடன் ஒப்பிடும் போதுஅதில் 06 பதவிகளில் 08 வெற்றிடங்கள் காணப்பட்டன. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(ஆ) ஊழியர் கடன்** | | |
| 2021 யூலை 28 ஆந் திகதி ஓய்வுபெற்றிருந்த உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 84,250 ஆன கடன் மீதியொன்று அறவிடப்பட்டிருக்க வில்லை. | ஓய்வூதிய திணைக்களத்திற்கு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. | கடன் மீதிகள் அறவிடப்பட வேண்டும் |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வான்டிற்காக 02 வருமான விடயங்களில் 24 சதவீதத்திற்கும் 75 சதவீதத்திற்கும் இடைப்பட்ட விலகலும் 06 செலவின விடயங்களில் 31 சதவீதம் முதல் நூறு சதவீதம் வரையான விலகல்களும் நிகழ்ச்சித் திட்டமொன்றின் 25 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 4,266,000 ஆன நிதி ஏற்பாடுகளில் எவ்வித செலவினமொன்று மேற்கொள்ளப்படாமை காரணமாக பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டு இருக்கவில்லை. | செலவின தலைப்பு களுக்கு நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்ட போதும் சேமிக்கப்பட்டுள்ளதாக | கவனமாகவும் தேவைப்பாட்டினை கருத்திற் கொண்டு பாதீடு தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) வருடாந்த பாதிட்டில் நிதி ஏற்பாடு செய்ய செய்யாமல் ரூபா 2,894,925 ஆன 13 அபிவிருத்தி செயற் திட்டங்கள் மீளாய்வாண்டில் நிறைவேற்றப்பட்டிருந்தன. | பொதுச் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட அபிவிருத்தி செயற்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன | வருடாந்த பாதீட்டுக்குஇணங்க செயற்பட வேண்டும் |

### 4.2 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி சட்டத்தின் நியதிகளின் பிரகாரம் சபையினால் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகள் இனங் காணப்பட்டிருந்ததுடன் அவற்றை அடைந்துகொள்வதற்கோ செயலாற்றலை மதிப்பீடு செய்வதற்கு குறிகாட்டிகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் காலங்களில் குறித்த நடவடிக்கைகளை நிறைவேற்றுவதாக | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகள் செயற்படுத்தப்படல் வேண்டும். |